

நெல்லை மாவட்டம் சேரன்மாதேவி பேருந்து நிலையம் அருகில் திராவிடர் கழகம் சார்பில் குருகுலப் போராட்டத்தின் நூற்றாண்டு விழா,பத்தமடை கழக முன்னோடி பரமசிவத்திற்கு பாராட்டு விழா, "தாய் வீட்டில் கலைஞர்" என்னும் நூல் வெளியீட்டு விழா ஆகிய முப்பெரும் விழா தி.க.மாவட்ட தலைவர் ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி பங்கேற்றார். இந்நிகழ்வில் திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி எழுதிய நூலை, நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வெளியிட்டார். உடன் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மைதீன்கான், மாவட்ட அவைத்தலைவர் கிரகாம்பெல் மாநில வர்த்தக அணி இணை அமைப்பாளர் மாலை ராஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன், கழக முன்னோடி பத்தமடை பரமசிவம்,ஒன்றிய செயலாளர் முத்துப்பாண்டி என்ற பிரபு, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வ சூடாமணி உள்பட பலர் உள்ளனர்.

### தீபாவளி, பொங்கல் போன்ற விழாக்களின் போது முன்னேற்பாடாக

# நியாயவிலை கடைகளில் இருப்பு வைத்திருக்க வேண்டும்!

## திட்டப்பணிகள் ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் அர.சக்கரபாணி வலியுறுத்தல்!



நாமக்கல், அக். 18 -

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தலைமையில், வனத்துறை அமைச்சர் மருத்துவர்மா.மதிவேந்தன் முன்னிலையில் பொது விநியோக திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.கே.பி. சின்ராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பெ.ராமலிங்கம் சேந்தமங்கலம் கு.பொன்னுசாமி, நகரமைப்பு மண்டல திட்டக் குழு உறுப்பினரும், நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளருமான எஸ்.எம்.மதுரா செந்தில், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் / ஆணையர் மருத்துவர் ஹர் சஹாய் மீனா, மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் எ.அண்ணாதுரை, மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, குடிமை பொருள் வழங்கல் மற்றும் குற்றப் புலனாய்வு காவல் துறை தலைவர் ஜோசி நிர்மல் குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றவுடன், நியாய விலைக் கடைகளில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் உணவுப் பொருட்கள் தரமானதாகவும், சரியான அளவிலும் வழங்கப்பட வேண்டும். அதே போன்று நியாய விலைக் கடைகள் எவ்வாறு இருக்க வேண்டுமென்று வடிவமைத்து ஆலோசனைகளை வழங்கி உள்ளார்.

அதன் அடிப்படையில் நியாய விலைக் கடை கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. திறந்த வெளி நெல் கொள்முதல் நிலையங்களில் மழைக் காலங்களில் நெல் சேதமடைவதை தடுக்கும் பொருட்டு தமிழ்நாடு முதலமைச்சர் உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தினார். மேலும், ரூ.238 கோடி மதிப்பீட்டில் 2,86,450 மெ.டன் கொள்ளளவில் 10 மாவட்டத்தில் 20 இடங்களில் 211 சேமிப்பு கிடங்குகளை கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த நிதியாண்டில் தமிழ்நாடு முதலமைச்சர் டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், கடலூர், திருவாரூர் டெல்டா அல்லாத காஞ்சிபுரம், செங்கல்பட்டு, மதுரை ஆகிய 6 மாவட்டங்களில் 1.20 இலட்சம் மெ.டன் கொள்ளளவு கொண்ட சேமிப்பு கிடங்குகள் கட்டுவதற்கு ரூ.100 கோடி நிதி ஒப்பளிப்பு செய்து அனுமதி அளித்துள்ளார்கள். விரைவில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் தொடங்கப்படவுள்ளது.

இவ்வறாக கடந்த இரண்டு ஆண்டுகளில் 4 இலட்சம் மெ.டன் நெல் சேமித்து வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அரசின் இந்த நடவடிக்கையின் காரணமாக திறந்த வெளி நெல் கொள்முதல் நிலை யங்களே தமிழ்நாட்டில் இல்லை. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற இரண்டரை ஆண்டு காலத்தில் 16 இலட்சம் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது.

நியாய விலைக் கடைகளில் பயோ மெட்ரிக் நடைமுறை மூலம் பொருட்கள் வழங்கும் திட்டம் மேம்படுத்தப்பட்டு, கண் கருவிழி சரிபார்ப்பு முறையில் பதிவு செய்து பொருட்கள் வழங்கும் வகையில் தமிழ்நாட்டில் உள்ள 36,000 நியாய விலைக்கடைகளிலும் இத்திட்டதைச் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதே போன்று முதியோர்கள், மாற்றுத் திறனாளிகள், மருத்துவ சிகிச்சைகள் மேற்கொண்டு வருபவர்கள் நியாய விலைக் கடைகளுக்கு நேரில் சென்று பொருட்கள் வாங்க முடியாத நிலையில் அவர்களின் பரிந்துரை கடிதத்தின் அடிப்படையில் அவர்களுக்கான பொருட்கள் பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி தமிழ்நாட்டில் 3.50 இலட்சம் நபர்கள் பயன் பெற்றுள்ளனர். நாமக்கல் மாவட்டத்தில் 13,167 நபர்கள் பயன் பெற்றுள்ளனர்.

நகரப் பகுதிகளில் 1000 குடும்ப அட்டைகள், கிராம பகுதிகளில் 800 குடும்ப அட்டைகள் உள்ள நியாய விலைக் கடைகள் பிரிக்க வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டு 1500 நியாய விலைக் கடைகள் பிரிக்கப்பட்டுள்ளன. ஆண்டுக்கு 500 கடைகளுக்கு சொந்த கட்டடங்கள் கட்ட வேண்டுமென்ற அடிப்படையில் 1500 புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி, நியாய விலைக் கடைகளில் சாய்வு தளம் உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகளுடன் கட்டப்பட்டு வருகின்றன.

ஒன்றிய உணவுத்துறை அமைச்சர் தலைமையில் நடைபெற்ற மாநில உணவுத்துறை மாநாட்டில் தமிழ்நாட்டில் நியாய விலைக் கடைகளை சிறப்பாக வடிவமைத்து கட்டப்படுவதற்கு ஒன்றிய உணவுத் துறை அமைச்சர் பாராட்டுகளை தெரிவித்ததோடு, அனைத்து மாநிலங்களும் இதே போன்று கட்டப்பட வேண்டுமென அறிவுறுத்தினார்கள்.

இணையதளம் வாயிலாக நகல் குடும்ப அட்டை பெறுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த ஆட்சி காலத்தில் 376 அரவை நிலையங்கள் மட்டுமே இருந்த நிலையில் தற்போது 700 அரவை நிலையங்களாக விரிவுபடுத்தப்பட்டுள்ளன. மாதந்தோறும் 12 லட்சமாக அரவை திறன் அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும், பொதுமக்களுக்கு கருப்பு, பழுப்பு அரிசிகள் இல்லாத வகையில் அரிசி வழங்கும் வகையில் அனைத்து அரவை நிலையங்களிலும் இயந்திரம் பொருத்தப்பட்டு கருப்பு, பழுப்பு இல்லாத அரிசி வழங்கப்பட்டு வருகிறது. தரமான உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு மாவட்ட வழங்கல் அலுவலர் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது.

தீபாவளி பொங்கல் போன்ற விழாக்களின் போது அனைத்து நியாய விலை கடைகளில் முன்னேற்பாடாக அனைத்து பொருட்களும் இருப்பு வைத்துக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. அனைத்து நியாய விலைக் கடைகளின் செயல்பாட்டினை கண்காணிக்கும் பொருட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வருவாய் அலுவலர், கூட்டுறவு சங்க இணைப்பதிவாளர், மாவட்ட வழங்கல் அலுவலர், துணைப் பதிவாளர், வட்ட வழங்க அலுவலர் ஆகியோரை தொடர்ந்து ஆய்வு மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், பொதுமக்களுக்கு தரமான பொருட்கள் சென்றடைவதை உறுதி செய்யும் வகையில் இதுபோன்ற பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறார். இவ்வாறு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் குடிமை பொருள் வழங்கல் மற்றும் குற்றப் புலனாய்வு காவல் கண்காணிப்பாளர் பாலாஜி, மாவட்ட வருவாய் அலுவலர் மருத்துவர் ரெ.சுமன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சிவக்குமார், இணைபதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) த.செல்வகுமரன், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் முத்து ராமலிங்கம், தமிழ்நாடு நுகர்பொருள் கழக மண்டல மேலாளர் விஜய செல்வராணி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான் பிறந்தநாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!



சென்னை, அக். 18 -

பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான் பிறந்த நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான் அவர்களின் பிறந்தநாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர்

மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:

**பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துகள். நீங்கள் இன்னும் பல ஆண்டுகள் மகிழ்ச்சியுடனும் நல்ல ஆரோக்கியத்துடனும் வாழ வாழ்த்துகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.



நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில், வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் முன்னிலையில் பொது விநியோக திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.கே.பி. சின்ராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பெ.ராமலிங்கம் சேந்தமங்கலம் கு.பொன்னுசாமி, நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மை செயலாளர் / ஆணையர் மருத்துவர் ஹர் சஹாய் மீனா, மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் எ.அண்ணாதுரை , மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பா.ஜ.க போராட்ட நாடகங்கள் ஊரை ஏமாற்றவா?

**த**மிழகத்திற்கு காவிரி நீரைப் பெற்றுத்தர வக்கற்ற இந்தியாவை ஆளும் ஒன்றிய பா.ஜ.க. அரசை நடத்திவரும் சர்வாதிகாரப் போக்கைக் கொண்ட பிரதமர் நரேந்திர மோடியை வலியுறுத்தாமல் பா.ஜ.க.வின் சார்பாக கழக அரசைக் கண்டித்து கும்பகோணத்தில் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக சுடாத துப்பாக்கியை வைத்துக் கொண்டு சுட்டுவிடுவேன், சுட்டு விடுவேன் என்று அ.தி.மு.க. வினரை மிரட்டுவதைப் போல் தி.மு.க. அரசை மிரட்டப் பார்க்கிறார் அரசியல் சாதுர்யமில்லாத அண்ணாமலை.

தமிழ்நாடு முழுவதும் நடைபயணம் மேற்கொண்டார். அவரது நடைபயணத்தைப் பற்றி பா.ஜ.க.வைச் சேர்ந்த சிலரே இது நடைபயணம் அல்ல கேரவன் பயணம் என்றனர். அன்றைக்கு பா.ஜ.க.விற்கு தோழமையாக இருந்த கட்சியினரோ ஒரு நாளைக்கு ஒன்றரை அல்லது இரண்டு கி.மீ.தான் நடக்கிறார் மற்ற நேரமெல்லாம் வாகனப் பயணம் தான் என்று அவரது நடைபயணத்தைப் பற்றி நாவாடல் புரிந்தனர். பத்திரிக்கைகள் பலவும் அப்படியே படம் பிடித்துக் காட்டினர். தி.மு.க வினர் யாரும் அவரைப் பொருட்படுத்தவே இல்லை. கழகப் பத்திரிக்கையிலும் அவரது நடைபயணத்தைப் பற்றி விமர்சித்து எழுதவில்லை.

வர இருக்கின்ற 2024 நாடாளுமன்றத் தேர்தல் தி.மு.கவிற்கும் பா.ஜ.க.விற்கும் தான் என்று ஜோக் அடித்து சிறுபிள்ளைகளின் கண்ணாமூச்சி விளையாட்டையெல்லாம் நடத்தினார். இதைக் கேட்டு அ.தி.மு.க.வினர் அண்ணாமலையின் அறிவாற்றலைப் பற்றி அங்கலாய்த்தது அரங்கேறிய தனிக்கதை.

நடைபயணம் மேற்கொண்ட அரசியல் வாதிகளெல்லாம் கால்கள் புண்ணாகி இரத்தம் ஒழுக ஒழுக அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர் நடக்க வேண்டாம் நிறுத்திக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொண்ட போதும் மதுரையிலிருந்து திருச்செந்தூர் வரை நீதி கேட்டு நெடும் பயணம் மேற்கொண்ட முத்தமிழறிஞர் கலைஞர் ஆக முடியாது?

1938ல் திருச்சியிலிருந்து இந்தித் திணிப்பை எதிர்த்து ஆவேசமாக இராமமிர்தம் அம்மையார் உட்பட பல பெண்களோடு சென்னை வரை முழக்கமிட்டு ஆங்காங்கே அனல்கக்கும் பேச்சால் மக்களிடையே இந்தி எதிர்ப்பு உணர்வை தூண்டி விட்டுக் கொண்டே வந்தாரே பட்டுக்கோட்டை அஞ்சா செஞ்சன், அக்னி வார்த்தைகளின் பிறப்பிடம் அழகிரிசாமி ஆகிடவும் முடியாது.

ஒற்றுமை யாத்திரை என்று இந்தியாவின் குமரி முனையில் கழகத் தலைவர் மோடி ஆட்சிக்கு முடிவுரை எழுதப் போகும் இந்தியா கூட்டணிக்கு வித்திட்ட தளபதி அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு காஷ்மீரில் முடித்த ராகுல் காந்தியும் ஆகி விட முடியாது.

இப்போது உண்ணாவிரதம் இருக்கப் போகிறார்களாம்! அதுவும் தி.மு.க அரசை கண்டித்தாம்! என்னே வேடிக்கை! படுத்திருக்கும் சிங்கத்தின் வாலை லேசாக தொட்டு விட்டு சுண்டெலி சொன்னதாம் சிங்கத்தையே வீழ்த்தி விட்டேன் என்று. அதைப்போல கால் ஊன்ற இடமில்லை, காலுக்கும் ஊன்றி நிற்க போதுமான வலுவில்லை தமிழ்நாட்டில், இந்த நிலையில் இருக்கிற பா.ஜ.க. என்கிற சுண்டெலி ஏதோ கத்தி விட்டு போகட்டும் என்று கண்டு கொள்ளாமல் விட்டால் தி.மு.க என்ற சிங்கத்தை சீண்டிப் பார்க்கப் போராட்டம் நடத்தப் போகிறார்களாம்.



**வி.பி.கலைராஜன்**

கழக இலக்கிய அணிச் செயலாளர்

காவிரி மேலாண்மை ஆணையம் தமிழகத்திற்கு கேட்ட தண்ணீர் 16000 கன அடியைக் கூட அல்ல ஆணையிட்ட வெறும் 3000 கன அடி தண்ணீரைக்கூட கர்நாடக அரசு தமிழகத்திற்குத் தரக்கூடாது என்று போராட்டம் நடத்துவது யார் பா.ஜ.க.வினர் தானே! ஒன்றிய அமைச்சராக இருக்கிற ராஜீவ் சந்திர சேகர் என்பவர் தமிழகத்திற்கு தண்ணீர் தரக் கூடாது என்று கூறுகிறாரே அவர் யார் பா.ஜ.க.காரர் தானே?

பசுவராஜ் பொம்மை மற்றும் எடியூரப்பா என்ற இரண்டு முன்னாள் கர்நாடக முதல்வர்களும் தமிழகத்தின் எல்லை வரை வந்து தமிழ்நாட்டுக்கு தண்ணீர் தரக்கூடாது என்று கர்நாடக அரசை காவிரி மேலாண்மை ஆணையத்தின் உத்தரவை நிறைவேற்றக் கூடாதென்று மக்களையும் அல்ல! அல்ல! தங்களது பா.ஜ.க. தொண்டர்களை தூண்டி விட்டு பந்த் இருமுறை நடத்த வைத்தனரே, அந்த இரண்டு முன்னாள் முதல்வர்களும் யார்? பா.ஜ.க. வினர் தானே!

கர்நாடக காங்கிரஸ் அரசு காவிரி மேலாண்மை ஆணையத்தின் உத்தரவுப்படி தந்த தண்ணீரை தடுத்திடும் அளவிற்கு போராட்டத்தின் மூலம் நெருக்கடியை தந்து கொண்டிருப்பவர்கள் யார்? பா.ஜ.க. தலைவர்களும், கட்சியினரும் தானே!

கர்நாடகத்தில் காவல்துறை அதிகாரியாக இருந்து அந்த மாநில உணர்வோடு இருக்கும் அண்ணாமலையே எதற்கப்பா உண்ணாவிரதம்? முதலில் உங்கள் பிரதமர் மோடியிடம் கூறி கர்நாடகத்தில் இருந்து தமிழகத்திற்கு தண்ணீர் தரக்கூடாது என்று போராடுகிற பா.ஜ.க. வினரை போராடாமல் நிறுத்தச் சொல்லுங்கள். அது என்ன இந்திய பிரதமர் என்று எழுதாமல் உங்கள் பிரதமர் மோடி என்று எழுதியுள்ளோம் என்று கேட்கத் தோன்றுகிறதா?

ஆம்! மோடி தலைமையிலான ஒன்றிய அரசின் அமைச்சர் ஒருவரே தமிழகத்திற்கு தண்ணீர் தரக்கூடாது என்று சொன்னால் தமிழ்நாடு இந்தியாவின் அங்கம் இல்லையா? தமிழ் நாடு என்ன தனிநாடாகவா இருக்கிறது? அந்த ஒன்றிய அமைச்சரை ஏன் உங்கள் பிரதமர் மோடி இதுவரை கண்டிக்கவில்லை. அப்படி அந்த அமைச்சர் பேசியதை ஊக்குவிக்கிற பிரதமர் உங்கள் பிரதமராகத்தான் இருக்க முடியும். இந்தியா ஒருமைப்பாட்டை விரும்பும் எங்களால் எப்படி அவரை இந்தியப் பிரதமர் என்று அழைக்க முடியும்? மணிப்பூரைப் போல் தமிழகத்தைப் பார்க்க விரும்புபவர் என்றைக்கும் எங்கள் பிரதமராக ஆக முடியாது.

பிரதமராக மன்மோகன் சிங் இருக்கும் போது இதே போன்ற பிரச்சினை, கர்நாடகம் தண்ணீர் தர மறுத்த போது உடனே தலையிட்டு விநாடிக்கு 9000 கன அடி தர வேண்டும் என்று கர்நாடகத்திற்கு உத்தரவிட்டதை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். உங்கள் பிரதமர் மோடி ஏன் அவ்வாறு செய்யவில்லை? தமிழ்நாட்டில் விளையும் நெல் இந்தியாவிற்கே பயன்படும் என்ற போது அந்தப் பயிர்கள் கருகிட பிரதமர் மோடி நாட்டு மக்கள் மீது அக்கறை இருந்தால் இந்நேரம் தமிழகத்திற்கு தண்ணீர் தர உத்தரவிட்டிருக்க முடியும்!

ஐ.பி.எஸ். படித்த அண்ணாமலையே முதலில் உங்கள் பிரதமர் மோடியிடம் கூறி போராடும் பா.ஜ.க.வின் மனித நேயமில்லாத மரத்துப் போனவர்களிடம் போராடாமல் நிறுத்தச் சொல்லுங்கள். பிறகு உங்கள் உண்ணாவிரத நாடகத்தை உங்கள் அரசியல் இருப்பைக் காட்டிக் கொள்ள அரங்கேற்றம் செய்யுங்கள்.

தமிழ்நாட்டிற்கு தமிழ் நாடு என்று பெயர் வைக்க வேண்டு மென்று விருதுநகர் நகரத்தில் உண்ணாவிரதம் இருக்காமல் விருதுநகர் நகரம் தாண்டித் தள்ளி தான் இருந்தார். பிறகு அவரை விருதுநகரில் உண்ணாவிரதம் இருக்க வைத்தனர். அறிஞர் அண்ணா போராடி தடுக்கப் பார்த்தார்., முடியவில்லை, ஜீவா தடுக்கப் பார்த்தார் முடியவில்லை. 76 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து உயிர் விட்டாரே! எதற்காக? இந்த மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் வைக்கத்தான்! அப்படி உண்ணாவிரதம் இருந்து உயிர் விட்ட தியாகி சங்கரலிங்கனார் ஆகிவிட முடியாது?

அண்ணாமலையே நீங்கள் அவசரத்தில் வார்த்தைகளை அள்ளிவீசும் அரசியலில் ஒரு எல்.கே.ஜி. மாணவர். சில நாட்களுக்கு முன்பு எங்கள் சகோதரர் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதியால் டி.என்.பி.எஸ்.சி தேர்வில் குரூப் 4 தேர்வு எழுதி வெற்றி பெற முடியுமா என்றீர்களே! ஞாபகம் இருக்கிறதா?

யு.பி.எஸ்.சி மற்றும் டி.என்.பி.எஸ்.சி யைப் பற்றி அடிக்கடிப் பேசும் அண்ணாமலையே 44 வயதில் ஒருவர் குரூப் 4 தேர்வு எழுத முடியுமா? அதற்கு அனுமதி உண்டா? எல்லாம் தெரிந்தவரே உங்களால் இந்த வயதில் தேர்வு எழுத வைக்க முடியமா என்று மோடியிடம் கேட்டுச் சொல்லுங்கள். அந்த வயதில் தேர்வு எழுத முடியாது என்பதைக் கூட அறியாமல் உமக்கெல்லாம் எதற்கு சவால்? அப்படி எழுதிட அனுமதி வாங்கித் தந்தால் எங்கள் சகோதரரை தேர்வு எழுத வைப்பதைப் பற்றி நாங்களும் பரிசீலிக்கிறோம்.

தன்மானம் தான் எனக்கு முக்கியம்? அதைவிட்டு விட இந்த அண்ணாமலை என்றைக்கும் தயாரில்லை என்று ஆவேசமாக பேசினீரே! உங்களோடு உறவை முறித்துக் கொண்டோம் என்று கூறிய பிறகு அ.தி.மு.க. தலைவர்கள் உங்களை அரசியல் அறிவற்றவர் என்றார்களே அதற்கு பதில் எங்கே? எங்கே போனது உங்கள் தன் மானம்? பத்திரிக்கையாளர்கள் கேட்டால் பதில் சொல்லாமல் மேலிடம் பதில்தரும் என்று பம்முகிறீர்களே ஏன்? இதற்கு பெயரென்ன வீரமா?

உங்கள் தன்மானம் தளர்ந்து போய்விட்டதா? சுய மரியாதை சுருண்டு போய் விட்டதா? துப்பாக்கியில் தோட்டா இல்லையா? அல்லது துப்பாக்கியைத் தூக்க முடியாத அளவிற்கு உங்கள் மேலிடத்தால் காயம் பட்டு விட்டீர்களா? அ.தி.மு.க., பா.ஜ.க. உறவு முறிவு நாடகம் என்று மக்கள் பேசிக் கொள்வதில் உண்மையிருக்குமோ?

எடப்பாடியார் தி.மு.க அரசை மட்டும் தொடர்ந்து பேசுகிறார். 9 ஆண்டு கால பா.ஜ.க. அரசைப் பற்றி ஒரு வார்த்தை இன்றைய தேதி வரை பேசவில்லையே! நீங்களும் ஒன்றும் பேசாமல் மேலிடம் பதில் தரும் என்கிறீர்களே! இதற்கு பெயர் அரிதாரம் போடாத நாடகமா? அசல் உறவு முறிவா? முதலில் அண்ணாமலையே இதற்குப் பதில் சொல்லிவிட்டு பிறகு தி.மு.க அரசை எதிர்த்துப் புது காரணம் ஏதாவது கிடைக்கிறதா என்று தேடிப் பார்த்து விட்டு போராட தயாராகுங்கள்.

ஆமாம், ஒன்றிய அரசை தண்ணீர் தர வலியுறுத்தி சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்த போது எதிர்க்கட்சி மற்றும் தோழமைக் கட்சிகளெல்லாம் ஒரே மனதோடு தமிழ்நாடு அரசின் காவிரிக்கான தீர்மானத்தை ஆதரித்துப் பேச உங்கள் பா.ஜ.க. வைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் திருமதி.வானதி வெளிநடப்பு செய்தது ஏன்? இது நியாயமா? பா.ஜ.க. நோக்கமெல்லாம் கன்னடர்களும் தமிழர்களும் எப்படியாவது மோதிக் கொள்ள வேண்டும். அதை வைத்து அரசியல் செய்து கர்நாடகத்தில் சில எம்.பி. சீட்களையாவது வெல்ல வேண்டும் என்பதுதான்.

எனவே அண்ணாமலையே! உங்கள் போராட்டத்தால் ஒன்றும் நிகழப் போவதில்லை! உடனே கர்நாடகத்தில் தண்ணீர் தரக் கூடாது என்று போராடும் உங்கள் பா.ஜ.க. கட்சித் தலைவர்களை, தொண்டர்களை போராடாமல் இருக்க சொல்லி உத்தரவிட உங்கள் பிரதமர் மோடியிடம் கூறுங்கள்! உங்களிடம் கேட்க வேண்டிய கேள்விகள் நிறைய இருக்கிறது பிறகு கேட்கிறோம்.





நெல்லை மாநகர தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் டவுன் லெட்சுமி மகாலில் வைத்து மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாநில நெசவாளர் அணி துணை செயலாளர் நெல்லை தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார் பங்கேற்று கருத்துக்களை வழங்கி பேசினார். உடன் பூ.சுப்பிரமணியன், சுப. சீதாராமன், முருகன், சுரேஷ்,துணை மேயர் ராஜ்,பொன்னையா பாண்டியன், குமார சுப்பிரமணியன், பெருமாள், நமச்சிவாயம், அன்டன் செல்லத்துரை, அப்துல் கையூம், சுதாமூர்த்தி, மாரியப்பன், பத்மா, சௌந்தரம் உள்பட பலர் உள்ளனர்.